இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 248 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 05 – வெள்ளிக்கிழமை 18 ஏப்ரல் 2025 – சென்னை 56 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 248 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 05 - Friday 18 April 2025 - Chennai 56 Pages ₹ 5.00


## ரூ.1,882 கோடி முதலீட்டில் 1000 பேருக்கு வேலைவாய்ப்பு! சிப்காட் - சிறுசேரி

# தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ‘சிஃபி’ நிறுவனத்தின் தரவு மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஏப். 18–

**ரூ.1,882 கோடி முதலீட்டில் 1000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சிப்காட் சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் சிஃபி நிறுவனத்தின் தரவு மையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.04.2025) செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1,882 கோடி ரூபாய் முதலீட்டில் 1000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சிஃபி நிறுவனம், சிப்காட் – சிறுசேரி தொழில்நுட்பப் பூங்காவில் அமைத்துள்ள தரவு மையத்தை திறந்து வைத்தார்.

### பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம்!

தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, 2024-25ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு 2024-25ஆம் ஆண்டில் 9.69 சதவிகிதம் வளர்ச்சி வீதத்துடன் இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சி இதுவாகும்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், தரவு மையங்களுக்கான முன்னணி மையமாக உள்ள தமிழ்நாட்டினை, தரவு மைய சந்தையில் முதலீட்டாளர்களுக்கு விருப்பமான இடமாகவும், நாட்டின் தரவு மைய தலைநகராகவும், மாற்றம் செய்வதற்காக தொலைநோக்கு பார்வையுடன் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு தரவு மையக் கொள்கையை 26.11.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். அதன் பலனாக, பல்வேறு முன்னணி நிறுவனங்கள் இத்துறையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.04.2025) செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.1,882 கோடி முதலீட்டில் 1000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சிஃபி நிறுவனம், சிப்காட் – சிறுசேரி தொழில்நுட்பப் பூங்காவில் அமைத்துள்ள தரவு மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச. அருண்ராஜ், சிஃபி டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜு வெஜேஸ்னா, செயல் இயக்குநர் விஜயகுமார், நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிஃபி டெக்னாலஜீஸ் நிறுவனம்

சிஃபி டெக்னாலஜீஸ் நிறுவனம், ஒருங்கிணைந்த இணையச்சேவை தீர்வுகள் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள், தரவு மைய உள்கட்டமைப்பு, கிளவுட், நெட்வொர்க் சேவைகள் மற்றும் பாதுகாப்பு தீர்வுகள் உள்ளிட்ட பல்வேறு தீர்வுகளை வழங்கி வரும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம், சிப்காட் சிறுசேரி தகவல் தொழில் நுட்பப் பூங்காவில், 40 மெகாவாட் மின் ஆதரவு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுடன், ஒரு அதிநவீன தரவு மையத்தை நிறுவியுள்ளது. முதற்கட்டமாக, இத்திட்டத்தில் 1,882 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய இந்த அதிநவீன தரவு மையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார். 2027ஆம் ஆண்டிற்குள், சென்னையில், 13,000 கோடி ரூபாய் முதலீடு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

### சென்ற ஆண்டு நடந்த புரிந்துணர்வு ஒப்பந்தம்!

இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், சிஃபி டெக்னாலஜீஸ் நிறுவத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜு வெஜேஸ்னா, செயல் இயக்குநர் விஜயகுமார், நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க.வுக்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றி:

# ஒன்றிய அரசின் வக்ப் சட்டத்திருத்தம் - உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை!

## “வக்ப் வாரியத்தில் இஸ்லாமியர்கள் அல்லாதோரை நியமிக்கக் கூடாது!”

புதுடெல்லி, ஏப்.18–

**புதிய திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் வக்ப் சொத்துக்களை மாவட்ட ஆட்சியர்கள் வகை மாற்றம் செய்ய இடைக்கால தடை விதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வக்ப் வாரியத்தில் இஸ்லாமியர்கள் அல்லாதோரை நியமிக்கக் கூடாது என்றும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. இந்த ஆணை தி.மு.க.விற்கு கிடைத்த இன்னுமொரு வெற்றி என்று கருதப்படுகிறது.**

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, வக்ப் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து ஒன்றிய பாஜக அரசு அதனை சட்டமாக்கியுள்ளது. இந்த வக்ப் திருத்த சட்டத்தை கைவிடக்கோரி, தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், ஒன்றிய அரசின் வக்ப் திருத்த சட்டத்திற்கு எதிராக தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகள் உட்பட 70க்கும் மேற்பட்ட மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் அடங்கிய அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

விசாரணை தொடங்கியதும், ‘இந்த ரிட் மனுக்களை விசாரிப்பதா? அல்லது மனுக்களை ஐகோர்ட்டுக்கு அனுப்பி விசாரிக்க சொல்வதா? இந்த விவகாரத்தை வலியுறுத்தி முன்வைக்கப்பட உள்ள வாதங்கள் என்ன?’ என இருதரப்பையும் கேட்டனர்.

இதைத்தொடர்ந்து மனுதாரர் தரப்பில் மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் வாதாடினார். அப்போது அவர், ‘அரசியலமைப்பு சட்டத்தின் 26வது பிரிவில் மதம் சார்ந்த விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை அனைவருக்கும் பொதுவானது. மதச்சார்பற்றது. ஆனால், வக்பு சட்ட திருத்தம் வழிபாட்டு முறையை பறிக்கிறது.



வக்புக்கு சொத்தை எழுதிவைக்க விரும்பினால் 5 ஆண்டுகளாக முஸ்லிம் மதத்தை பின்பற்றியதற்கான ஆதாரத்தை வழங்க வேண்டும் என புதிய சட்ட திருத்தம் கூறுகிறது. பிறப்பால் முஸ்லிம் என்ற பட்சத்தில் அந்த ஆதாரத்தை ஏன் காட்ட வேண்டும்?. முஸ்லிம் மதத்தில் மரபு வாரிசுரிமை இறப்புக்கு பின்பே வருவதில் வக்பு சட்ட திருத்தம் தலையிடுகிறது’ என வாதிட்டார்.

இதைத்தொடர்ந்து மூத்த வழக்கறிஞர் ராஜீவ் தவன் ஆஜராகி, ‘முஸ்லிம் மதத்தில் ஒருங்கிணைந்த அங்கமாக வக்பு இருந்து வருகிறது. மத அடிப்படையிலான தானம் முக்கிய அம்சமாகும்’ என வாதிட்டார்.

மனுதாரர் தரப்பு மற்றொரு மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி ஆஜராகி, ‘வக்பு சட்ட திருத்தம் நாடு முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்துவதால், இந்த ரிட் மனுக்களை ஐகோர்ட்டுக்கு மாற்றி விசாரிக்க உத்தரவிடக்கூடாது. மாறாக வக்பு சட்ட திருத்தத்தை நடைமுறைப்படுத்த இடைக்கால தடை விதிக்க வேண்டும்’ என வாதிட்டார்.

மற்றொரு மனுதாரர் தரப்பு மூத்த வழக்கறிஞர் ஹுஸேபா அகமது ஆஜராகி ‘அனுபவ வக்பு சொத்து என்பது முஸ்லிம் மதத்தில் நிலைபெற்ற வழக்கமாக இருப்பதால், அனுபவ சொத்துகளை கையகப்படுத்த அனுமதிக்க கூடாது’ என வாதிட்டார்.

தி.மு.க. சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆஜராகி, ‘பொது ஒழுங்கு, பொது சுகாதாரம் போன்றவை பாதிக்கப்படும்போது மட்டுமே இயற்றப்படும் கட்டுப்பாடுகளைக் கொண்ட சட்டங்களை வக்பு சட்ட திருத்தம் கொண்டுள்ளது. இது மதம் சார்ந்த விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமையை பறிக்கிறது’ என வாதிட்டார்.

அப்போது தலைமை நீதிபதி, ‘1925ம் ஆண்டுக்கு முந்தைய அனுபவ வக்பு சொத்துகளின் நிலை என்னவாகும்?. ஆங்கிலேயர் காலத்துக்கு முன் பதிவுமுறை இல்லாத காலத்தில் 12, 13, 14, 15ம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட மசூதிகளுக்கு விற்பனை ஆவணத்தை கேட்டால் என்னவாகும்?. உதாரணமாக டெல்லி ஜும்மா மசூதி அனுபவ சொத்தாக கருதப்படுகிறது’ என்று தெரிவித்தார்.

உடனே சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, ‘பதிவு செய்யப்பட்டிருந்தால் அத்தகைய சொத்துகள் செல்லுபடியாகும். இத்தகைய சொத்துகளை பதிவு செய்ய யாரும் தடுக்கவில்லை. முஸ்லிம்களில் பெரும்பகுதியினர் வக்பு சட்டத்தால் ஆளப்படுவதை விரும்பவில்லை’ என்று தெரிவித்தார்.

### இடைக்கால உத்தரவு!

இதற்கு நீதிபதிகள், ‘அப்படியென்றால் இந்து அறநிலையத்துறைகளில் முஸ்லிம்கள் அங்கம் வகிக்கலாம் என கூற வருகிறீர்களா?. கூற வருவதை வெளிப்படையாக கூறுங்கள்’ என தெரிவித்தனர்.

மேலும் நீதிபதிகள், வக்பு சொத்துகள் குறித்து மாவட்ட கலெக்டர்கள் மேற்கொண்டு வரும் விசாரணை முடிவுகளை செயல்படுத்தக்கூடாது. வக்பு வாரியங்களிலும், மத்திய வக்பு கவுன்சிலிலும் அலுவல்வழி உறுப்பினர்கள் இருவரை தவிர அனைவரும் முஸ்லிம்களாக இருக்க வேண்டும் என்பன போன்ற இடைக்கால உத்தரவுகளை பிறப்பிக்க உத்தேசித்து உள்ளோம். இவை தொடர்பாக வாதங்களை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன் வைக்கும் வகையில் விசாரணை தள்ளி வைக்கப்படும்’ என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்த மனுக்கள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா தலைமையிலான அமர்வு முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஒன்றிய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல், வக்ப் சட்டத்தின் சில பிரிவுகளுக்கு தடை விதிப்பது என்பது சில பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும், ஒரு வாரத்தில் பதிலளிக்க ஒன்றிய அரசு தயாராக உள்ளது என்றும் வாதிட்டார். இதையடுத்து, வக்ப் திருத்த சட்டத்தின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர்கள் வக்ப் சொத்துக்களை வகை மாற்றம் செய்ய இடைக்கால தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

வக்ப் சொத்துக்களை பயனாளிகள் தொடர்ந்தாலோ, வக்ப் என்று அறிவிக்கப்பட்ட சொத்துக்களையோ, வக்ப் அல்லாத சொத்து என வகை மாற்றம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய திருத்த சட்டத்தின்படி வக்ப் வாரியத்தில் இஸ்லாமியர்கள் அல்லாதோரை உறுப்பினர்களாக நியமிக்கக் கூடாது என்றும் உத்தரவிட்ட நீதிபதிகள், வக்ப் சொத்து மீது தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

மேலும், வக்ப் திருத்த சட்டத்திற்கு எதிரான மனுக்கள் மீது ஒன்றிய அரசு ஒரு வாரத்தில் பதில் அளிக்க உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை மே 5ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

இதற்கிடையே, டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மூத்த வழக்கறிஞர் வில்சன், வக்ப் திருத்த சட்டத்திற்கு இடைக்கால தடை விதித்த உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவு தி.மு.க.வுக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றி என்று கூறினார்.

---

## வக்ப் திருத்தச் சட்டத்திற்கு இடைக்காலத் தடை!

# உச்சநீதிமன்றத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

சென்னை, ஏப். 18 –

வஃப் திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடை விதித்த உச்சநீதிமன்றத்திற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

**முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:**

**வக்ஃபு திருத்தச் சட்டம், 2025ஐ எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் தாக்கல் செய்த மனுவை மற்ற மனுக்களுடன் சேர்த்து விசாரித்ததற்கும், வக்ஃபு சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், வக்ஃபு வாரியங்கள் அல்லது கவுன்சில்களில் முஸ்லிம் அல்லாதவர்களை நியமிப்பதைத் தடுப்பதற்குமான இடைக்கால உத்தரவைப் பிறப்பித்ததற்காக மாண்பமை உச்ச நீதிமன்றத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**முஸ்லிம் சமூகத்தின் அறக்கட்டளைகள் மற்றும் முக்கிய மத நடைமுறைகளின் நிர்வாகத்தில் தலையிடுவதன் மூலம், அவர்களைக் குறிவைத்து தாக்கும் ஒரே நோக்கத்துடன், இந்த தீய சட்டத் திருத்தம் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது.**

**நாங்கள் சுட்டிக்காட்டியபடி, இந்த திருத்தச் சட்டத்தின் பல பிற்போக்குத்தனமான விதிகளை நீதித்துறையின் மறுஆய்வு செய்து மட்டுப்படுத்தி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. நமது சிறுபான்மைச் சகோதரர்களுக்கு அரசியலமைப்பு அளித்துள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.